மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று தொடர்ந்து பேச அனுமதி கோரினர்.)

உங்களுக்கு என்ன அழுத்தமோ தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் நன்றாக பேசுகின்ற உறுப்பினர்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருப்பீர்கள். இன்று உங்களுக்கு என்னவென்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

## (ஈ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்பமை தலைவர் அவர்களே, இந்த மாநில ஆணைய திருத்தச் சட்டமுன்வடிவில் ஒரு திருத்தம் வேண்டுமென்று அறிமுக நிலையிலேயே வலியுறுத்துகிறேன். (குறுக்கீடு)

*2024 ஜூன் 29]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்து பதிவு செய்யப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். அதாவது தகவல் கோருகிற முறையில் கோரியாகிவிட்டது. (குறுக்கீடு) அதோடு நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோருக்கும் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்களுக்கு கொடுத்திருக்கிறேன்; திரு. இரா. அருள் அவர்களுக்கு கொடுத்திருக்கிறேன். திரு. S. சதாசிவம் அவர்களுக்கு கொடுத்திருக்கிறேன். திரு. ச. சிவகுமார் அவர்களுக்கு கொடுத்திருக்கிறேன். உங்களுக்கும் கொடுத்திருக்கிறேன். பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையாற்ற வேண்டும். உங்களுக்குத் தெரியும். நீங்கள் முதல் நாள் பேச வாய்ப்பு கேட்டீர்கள்; அதற்கும் அனுமதி தந்தேன். கல்வித் துறையில் பேச அனுமதி கேட்டீர்கள், நேற்றும் கேட்டீர்கள், உங்களுக்குத் தேவையான வாய்ப்புகள் எல்லாம் கொடுத்திருக்கிறேன். நீங்கள் பேசியது இங்கே பதிவில் இருக்கிறது. இன்றைக்கு விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தவர்களுக்கு மட்டும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டு, அவை பதிவு செய்யப்பட்டுவிட்டன. எல்லோருக்கும் பதில் சொல்லிவிட்டு, உங்களுக்கு சொல்லவில்லை என்றால், நீங்கள் இப்போது question செய்ய வேண்டும். எல்லோருடைய பதிவும் இருக்கிறது. துறையினுடைய அதிகாரிகள் இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட துறைக்கும் அவை போகும். அதற்குச் சரியான பதிலும் விளக்கமும் உங்களுக்கு வந்து சேரும். இதைத்தாண்டி, நீங்கள் மூத்த உறுப்பினர், எப்போதும் நன்றாக அரசிற்கு ஒத்துழைப்புக் கொடுக்கக்கூடியவர்கள், இப்போது வேறு ஏதோ ஒரு நிர்பந்தம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே எதுவுமே தவறான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. உண்மை எதுவோ அதுமட்டும்தான் செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) உங்களது கருத்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயமாக நல்ல பதில் கிடைக்கும். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2024 ஜூன் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019 ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றாகப் படித்தவர்கள். மூத்த சட்டமன்ற உறுப்பினர், முழுமையாகப் புரிந்தது. (குறுக்கீடு) நீங்கள் சொன்னது பதிவு செய்யப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் சொன்னது பதிவு செய்யப்பட்டது.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2016–2017 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான. . .(குறுக்கீடுகள்)

(திரு. ஜி.கே. மணி உள்ளிட்ட பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜி.கே. மணி உட்பட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவது